**<u>செய்தி வெளியீடு</u>**

**“மின்மய எண்முறை மற்றும் அறிவுசார் தொழில்நுட்ப ஆசிரியர்கள் வகுப்பறை (Smart Teachers Classroom) மற்றும் மாணவர்களுக்கு அறிவை மேம்படுத்துதல்”** குறித்த கருத்தாய்வுக் கூட்டம் காணொளி வாயிலான பங்கேற்பு முறையுடன் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் (முன்னர் மாநிலத் திட்டக்குழு என்று அழைக்கப்பட்டது) மாண்புமிகு துணைத் தலைவர் திரு சி.பொன்னையன் அவர்களின் தலைமையில் 16.12.2020 அன்று காலை மனித மேம்பாட்டு காணொளி அரங்கம், எழிலகம், சென்னை– 5ல் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் திரு அனில் மேஷ்ராம், இஆ.ப., மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு உறுப்பினர்–செயலர் துறைசார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கருத்தாய்வின் நோக்கமானது பள்ளிகளில் கற்பித்தல் (E–Pedagogy) முறையை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கான தேவைகளை அடையாளம் காண்பதும், உயர் தொழில்நுட்பம் மூலம் அவர்களுக்கு கல்வி கற்பித்து மாணவர்களின் பிரச்சினையை எளிதில் தீர்வு காண செய்தலும் ஆகும்.

மின்மய எண்முறை கற்பித்தல் மேம்பாட்டிற்காக “மின்மய எண்முறை கல்வியியல் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் தரமான உள்ளடக்கத்தை எண்முறை கற்றலாக இடம்பெறச் செய்து மனித நேயத்துடன் செயல்முறைப்படுத்தி இலக்கை அடைய வேண்டும்” என்று திரு அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., உறுப்பினர் செயலர், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு வலியுறுத்தினார்.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, மாண்புமிகு துணைத்தலைவர் திரு சி. பொன்னையன் அவர்கள் தனது உரையில் கூறியவதாவது வகுப்பறையில் எண்முறை அதிநவீன தொழில்நுட்பம் மூலம் விரிவான அறிவு, பகுப்பாய்வு சிந்தனை, புத்தாக்க சிந்தனை ஆற்றல் மற்றும் கைத்திறன் ஆகியவற்றில் மாணவர்களின் வளர்ச்சிக்காக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

பேராசிரியர் கணேசன் மற்றும் தலைவர், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை – 97 அவர்களது விளக்கக்காட்சியில் மேற்கண்ட கருத்தாய்வு தலைப்பில் பின்வரும் முறைகளில் விளக்கிக் கூறினார். 1. பல்வகை கற்றல் 2. விளையாட்டு முறையில் கற்றல் 3. சிக்கல்களை தீர்க்கும் பயிற்சி 4. அறிவுசார் தொழில்நுட்ப ஆசிரியர்கள் வகுப்பறை (Smart Teachers Classroom) 5. பல்லூடக கலந்துரையாடல் (Interactive Multimedia) 6. எண்ணலை கற்றல் (Digital Learning) 7. செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) 8. இயந்திர மனிதன்

மூலம் கற்றல் (Robot) 9. செயற்கைக்கோள் மூலம் கற்றல் (Drone Learning) 10. மின்வழி வழிகாட்டுதல் (E- Mentoring).

மேலும், மேற்கண்ட கருத்தாய்வில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், தமிழ்நாடு மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மன்றம் ஆகிய அரசு அலுவலக உயர் அலுவலர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

கூட்டத்தில் வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

உறுப்பினர் செயலர்,
மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**